HRC

# பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான சர்வதேச உடன்படிக்கை (1979) CEDAW



## பிரிவு– 1

### பாகுபாடு காட்டாமை

பாலியல் அடிப்படையில் மனித உரிமைகளை, அடிப்படைச் சுதந்திரங்களை பெண்கள் அனுபவிப்பதிலிருந்து பாகுபடுத்தவோ, ஒடுக்கவோ, ஒதுக்கவோ கூடாது.

## பிரிவு– 2

### சட்டப் பாதுகாப்பு மற்றும் எதிரான சட்டங்கள்



அய்.நாவின் உறுப்பு நாடுகள் தங்கள் அரசியல் சாசனங்களில், பெண்கள் உரிமைக்கெதிரான பகுதிகளை அகற்ற வேண்டும். எந்த ஒரு நபராலோ நிறுவனத்தாலோ பெண்கள் பாகுபடுத்தப்படுவாராயின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுங்குகள், பெண்கள் மீதான பாகுபடுத்தலுக்குத் துணை போகுமானால் அச்சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

## பிரிவு– 3

### அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தல்



பெண்களின் முழுவளர்ச்சியைக் கவனத்திற் கொண்டு, அரசு உரிய நடவடிக்கை எடுப்பதோடு தேவையான சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

## பிரிவு– 4

### நேர்மறைப் பாகுபாடு

பெண்களின் உண்மையான சமத்துவம் கருதி அரசு முன்னெடுக்கும் பெண்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை, ஆண்களுக்கு எதிரான பாகுபாடாகக் கருதக் கூடாது.

## பிரிவு– 5

## கற்பிதங்கள் ஒழிக்கப் பெறல்



பெண்கள் மீது மரபுரீதியாக சமூக, கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன் தீர்மானக் கருத்துக்களை, உயர்வு தாழ்வு கற்பிக்கும் கற்பிதங்களை போக்க அரசு முயலவேண்டும்.

## பிரிவு– 6

## பாலியல் சுரண்டல் ஒழிப்பு

பெண்களை கடத்தல், பாலியல் ரீதியாகச் சுரண்டல் என்பன தடை செய்யப்பட வேண்டும்.

## பிரிவு– 7

## அரசியல் மற்றும் பொது வாழ்கையில் பங்கேற்பு

தேர்தலில் பங்கு பெறவும், அரசுத் திட்டங்களை வகுத்தலிலும் நடைமுறைப்படுத்துவதிலும் , அரசு சாரா நிறுவனங்களில் பங்கு பெறவும் பெண்களுக்கு உரிமையுண்டு.

## பிரிவு–8

## பங்கேற்பு

எவ்வித பாகுபடுத்தலுக்கும் உள்ளாக்கப்பெறாமல், தேச, சர்வதேச நிறுவனங்களின் பணியில் பங்குபெறும் உரிமை மறுக்கப்பெறக் கூடாது.






## பிரிவு– 9

## தேசிய இனம்

தாம் சார்ந்த தேசிய இனங்களை மாற்றிக்கொள்ள பெண்களுக்கு உரிமையுண்டு.



## பிரிவு– 10

## கல்விக்கான உரிமை

ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துவகை கல்வியைப் பெறவும், கல்விக்கான சலுகைகளைப் பெறவும் உரிமையுண்டு. தொழில், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பெறவும் உரிமையுண்டு.

## பிரிவு– 11

## வேலைவாய்ப்பு

விரும்பிய வேலையை தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்குண்டு. சம ஊதியம், சலுகைகள் பெறவும் சமமாக நடத்தப்பெறவும் சமூக பாதுகாப்பு பெறவும் உரிமையுண்டு. ஊதியத்துடன் கூடிய மகப்பேறு கால விடுமுறைக்கும் உரிமையுண்டு.



## பிரிவு– 12

## நலவுரிமை

பெண்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது. பெண்கள் கருவுற்ற நிலையிலும் பிரசவ காலங்களிலும் பெண்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்க வேண்டுவது அரசின் கடமையாகும்.

## பிரிவு– 13

### சமூகப் பொருளாதார வாய்ப்புகள்

நாடுகள், பெண்கள் மீது பாகுபாட்டின் அடிப்படையில் பொருளாதாரம் மற்றும் சமுதாய வாழ்க்கையில் பங்கு பெறும் உரிமைகள் மறுக்கப்படாமல் சமத்துவமாக நடத்த வேண்டும். வங்கிக் கடன், கலாச்சாரம் மற்றும் விளையாட்டில் பங்குப் பெறும் உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

## பிரிவு– 14

### கிராமப்புற பெண்கள் நலன்

இவ்வுடன்படிக்கைகளில் தரப்பெறும் அனைத்து உரிமைகளும் கிராமப்புற பெண்களுக்கும் கிடைக்க வகை செய்யப்பெறல் வேண்டும். அரசின் திட்டங்களிலும் நடைமுறைப்படுத்தலிலும் பங்குபெற, நடைமுறைப்படுத்த உரிமையுண்டு. சமூகப் பாதுகாப்பு திட்டங்களில் பங்குபெற, சுய உதவிக் குழுக்களை உருவாக்க, சமூக நடவடிக்கையில் கலந்து கொள்ளவும் உரிமையுண்டு.

## பிரிவு– 15

### சட்டத்தின் முன் அனைவரும் சமம்

ஆண்களைப் போலவே சட்டத்தின் முன் சமமாகக் கருதப்பட வேண்டும்.



## பிரிவு– 16

திருமணம் செய்துகொள்ள, கணவனைத் தெரிவு செய்ய, தேவையெனில் நிராகரிக்க, குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிக்க, குழந்தைகளுக்கு வேண்டிய கல்வியைத் தெரிவு செய்திட, குடும்பப் பெயரைத் தெரிவு செய்ய உரிமையுண்டு.

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை -625002. தமிழ்நாடு

Ph:91-452-2539520 Fax: 91-452-2531874

E-Mail:ihre@pwtn.org Website: www.ihre.in / www.peopleswatch.org